**மது வரி வெகுமதி நிதியம் - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மதுவரி வெகுமதி நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, மதுவரி வெகுமதி நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மதுவரி வெகுமதி நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மதுவரி வெகுமதி நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மதுவரி வெகுமதி நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இணங்கியிருந்தது என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தன என்பதும்,

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ‘‘சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச்

செல்லப்படல் அவசியமானதாகும். பொதுப் பேரேடு, குறிப்பேடு, குறிப்பேட்டு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.5.2 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடன் இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01** | | |
| (i) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதியத்தின் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்தது என மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்ட 2.1 ஆம் குறிப்பு அறிக்கையிட்டிருந்தது. ஆனால், இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் ஏற்பாடுகளுக்கு முரணாக, நிதியத்தின் கணக்குகள் காசு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் அந்தக் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்ததென அறிவிக்கப்பட்டது. மேலும், குறித்த அறிக்கைகளில் காட்டப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் காசு அடிப்படையில் பதியப்பட்டிருந்தது என, கணக்குகளுக்கான 7 ஆம் இலக்க குறிப்பு சுட்டிக்காட்டுகின்றது. ஆகையினால், பெறவேண்டிய வருமானம் மற்றும் செலவுகளுடன் தொடர்புடைய குறிப்புக்களினை அந்தக் கணக்குகள் சுட்டிக்காட்டப்படவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில், நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ii) நிதியத்திற்காக திறைசேரியில் பேணப்படுகின்ற பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியக் கணக்கில் காணப்படும் ரூபா 49,683,233 மீதி, நடைமுறையல்லாச் சொத்தொன்றாகக் காணப்படுகின்றது. ஆனால், அது நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்தொன்றாக காணப்பட்டது. | 2019 ஆம் ஆண்டின் நிதிக் கணக்குகளினை தயாரிக்கையில் சரிப்படுத்தல் துல்லியமாக மேற்கொள்ளப்படும். | சரியான வகைப்படுத்தலின் கீழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

| | | |
|---|---|---|
| (i) ரூபா 47,134,000 பெறுமதியுடைய கட்டிடம் நிதி நிலைமைக் கூற்றில் காணிகள் மற்றும் கட்டிடங்களாகக் காட்டப்பட்டிருந்தது. ஆனால், குறித்த கட்டிடம் அமையப்பெற்றிருந்த காணி, கணக்காய்வுத் திகதியான 2019 மார்ச் 30 வரையிலும் மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கட்டிடங்கள் மீதான பெறுமானத்தேய்விற்கு எவ்வித சரிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ரூபா 47,134,000 பெறுமதியுடைய கட்டிடங்கள் மீதான பெறுமானத்தேய்வை கணிப்பீடு செய்வதற்கு உங்களது அறிவுறுத்தல்களின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. | கட்டிடம் அமையப்பெற்றுள்ள காணியின் உரிமைத்துவத்தினை மெய்மையாய்வு செய்வதன் மூலம், முறையாக மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்படல் வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காசு அடிப்படையில் கணக்குகளினை தயாரிப்பதற்கு கணக்கீட்டுக் கொள்கையொன்று காணப்படுகின்றது. எவ்வாறாயினும், வெகுமதிகள் உண்மையாகப் பெறப்பட்ட நடுவர் தீர்ப்பு கட்டணங்களின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருக்கவில்லை. பதிலாக, தொழில்நுட்ப பிரிவுக்கு அறிக்கையிடப்பட்ட நடுவர் தீர்ப்பு கட்டணங்களின் பெறுகைகள் (சிகரெட் மீதான அபராதத்துடன்) கணக்கிற்கு எடுக்கப்பட்டன. ஆகையினால், கணக்குகள் கிளையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நடுவர் தீர்ப்பு கட்டணங்களின் பெறுகைகள் மற்றும் சிகரெட்டுக்கள் மீதான அபராதங்கள் ரூபா 177,875,203 கூட்டுத்தொகையாகக் காணப்பட்ட அதேசமயம், வெகுமதிகளின் செலுத்துகைக்கு தொழில்நுட்ப பிரிவினால் கருத்திற்கொள்ளப்பட்ட தொகை ரூபா 133,474,335 தொகையான மாத்திரம் காணப்பட்டது. | நடுவர்தீர்ப்பு கட்டணங்கள் நேரடியாக வங்கியில் வைப்புச்செய்யப்படுகின்றமையால், தலைமை அலுவலகத்தினால் அந்த அறிக்கைகளினைப் பெறுவதில் தாமதங்கள் காணப்படக்கூடும். ஆகையினால், பணம் வைப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 07 நாட்கள் காலப்பகுதியொன்றுக்குள் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் தொடர்புடைய அறிக்கைகள் வழங்கப்பட வேண்டுமென அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினை மறுபடியும் நிகழ்வதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. | கணக்குகளினை அட்டுறு அடிப்படையில் தயாரிப்பதற்கு மற்றும் உள்ளக பிரிவு தொடர்பான அறிக்கை பிரிவுகளுக்கிடையே உறவுகளைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பரில் நிதியத்தினால் பெறப்பட்ட ரூபா 29,523,737 கூட்டுத்தொகையான நடுவர் தீர்ப்புக் கட்டணங்கள் மற்றும் ரூபா 758,800 கூட்டுத்தொகையான சிகரட்கள் மீதான அபராதத்திலிருந்தான வருமானம், திணைக்களத்தின் வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. ஆகையினால், ரூபா 30,282,537 கூட்டுத்தொகையான வருமானம் நிதியத்தின் கணக்குகளில் தவிர்க்கப்பட்டிருந்தது. | தலைமை அலுவலகத்தினால் பெறப்படவேண்டிய நடுவர்தீர்ப்பு கட்டணங்கள் மீதான வருமானம் மற்றும் சிகரட்டுக்கள் மீதான அபராதங்களின் அறிக்கையிடல் மற்றும் கணக்குகளுக்குக் கொண்டுவருவதற்காக ஒரு மாத தாமதமொன்று ஏற்படுகின்றது. ஆகையினால், தொடர்ந்துவரும் மாதத்தின் வருமானம் முன்னைய மாதத்தின் கணக்குகளுக்குக் எப்போதும் கொண்டுவரப்படுகின்றது. 2018 திசெம்பரில் பெறப்பட்ட நடுவர்தீர்ப்புக் கட்டணங்களிலிருந்தான வருமானம் மற்றும் சிகரட்டுக்கள் மீது பெறப்பட்ட கட்டணங்கள், 2019 சனவரியில் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. செயல்முறையை மீளாய்வுசெய்த பின்னர் எதிர்காலத்தில் அட்டுறு அடிப்படையில் கணக்குகளினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அட்டுறு அடிப்படையில் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் தொழிற்பாட்டு விளைவினை தொடர்புடைய முன்னைய ஆண்டிற்கான ரூபா 28,646,537 மிகைகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 36,759,028 மிகையொன்றான தொகையாகக் காணப்பட்டமையினால், நிதிசார் விளைவுகளில் ரூபா 8,112,491 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. நடுவர்தீர்ப்புக் கட்டணங்களின் பெறுகை ரூபா 42,711,176 தொகையொன்றினால் அதிகரித்தமை குறித்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த நிலையான சொத்துக்கள் மீது பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த அந்த தொகைக்குச் சமமான தொகையொன்று, திறைசேரியின் பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குறித்த நிதியத்தின் மீதி ரூபா 49.6 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், குறித்த நிதியத்தை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியத்தின் மீதியை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. | பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியத்தினை வினைத்திறனாக பயன்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தின் தற்போதைய உத்தியோகத்தர்களின் பல்வேறுபட்ட தரங்களுக்கிடையே ஒழுங்கின்மைகள், வெகுமதிகளின் செலுத்துகையில் முறைகேடுகள் மற்றும் திணைக்களத்தின் கடமைகளில் விரிவாக்கம் போன்ற காரணங்கள் காரணமாக, 1994 மார்ச் 04 ஆந் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் அமுல்படுத்தலிருந்து 2018 இல் உள்ளவாறு 24 வருடங்களுக்கும் அதிகமான காலப்பகுதியொன்று கடந்திருந்ததுடன், வெகுமதிகளின் செலுத்துகையில் முறையான மற்றும் ஆவணரீதியான முறைமையொன்று பின்பற்றப்படவேண்டிய அதேவேளை குறித்த அறிவிப்பும் மீளமைக்கப்படல் வேண்டுமென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | 1994 மார்ச் 04 ஆந் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலினை மீளமைப்பது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. | மதுவரி அறிவித்தலினை முறையாக விசாரணை செய்து மீளமைக்க வேண்டும். |

**3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உத்தியோகத்தர்களின் பயிற்சி மற்றும் கற்கைகளுக்கான திட்டமொன்றின் மீது அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது மீளாய்வாண்டில் அவற்றின் மீது ரூபா 2.5 மில்லியன் தொகையொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவற்றுக்கு எவ்வித பயிற்சி செயற்பாடுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்காமையினால் அந்தத் தொகை முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டில் அதே செயற்பாட்டின் மீது அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகூட முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் நிறுவகத்தில் தற்போது காணப்படும் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு முறையான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், தவிர்க்கமுடியாத சூழ்நிலைகள் காரணமாக பட்டியல்படுத்தப்பட்ட பாடநெறிகளினை நடாத்த முடியாதிருந்தது. | யதார்த்தமான முறைமையொன்றில் மதிப்பீடுகளினைத் தயாரிப்பதன் மூலம் உத்தியோகத்தர்களின் உற்பத்திதிறனை முன்னேற்றும் பொருட்டு வருடாந்தம் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | பாரட்டத்தக்க வேலைகள், உள்ளத்துணிவு செயற்பாடுகள், பொழுதுபோக்கு மற்றும் பொதுநல செயற்பாடுகள் மற்றும் விசேட திடீர் சோதனைகள் மற்றும் வாசிகசாலைப் புத்தகங்கள் போன்ற நிதியத்தின் பிரதான நோக்கங்களாகக் காணப்பட்ட செயற்பாடுகளின் மீது செலுத்துவதற்கு முறையே ரூபா 1 மில்லியன் மற்றும் ரூபா 50,000 தொகைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், அந்த ஒதுக்கீடுகள் முழமையாக சேமிக்கப்பட்டிருந்தது. ஆகையினால் நிதியத்தின் நோக்கங்கள் மீது போதுமான கவனஞ் செலுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | உள்ளத்துணிவு மற்றும் பராட்டத்தக்க வேலைகளுடன் தொடர்புடைய ஏதேனும் விசேட செயற்பாடுகள் 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப் பட்டிருக்காமையினால், அந்த நிதிகள் சேமிக்கப்பட்டது. இதுவரை புதிய கட்டிடத்தில் நூலகமொன்றிற்கு எவ்வித இடமும் ஒதுக்கப்படாமையினால், அது தொடர்பில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியத்தின் நோக்கங்கள் மற்றும் யதார்த்தமான அடிப்படையொன்றில் மதிப்பீடுகளினைத் தயாரிப்பதற்கு போதுமானளவு கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். |
| (இ) | மதுவரி தொடர்பான தொழில்நுட்ப குற்றங்கள் மீது 2014, 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர்சோதனைகள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கைகளின் பிரகாரம், முறையே 1101; 387; 339; 278 மற்றும் 631 இனால் திடீர்சோதனைகளின் எண்ணிக்கையில் படிப்படியான குறைவொன்று அவதானிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டில், 48 புதிய மதுவரி பரிசோதகர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த அதேவேளை, 92 மதுவரி காவலர்கள்கூட (Guards) | தொழில்நுட்ப குற்றங்கள் தொடர்பான திடீர் சோதனைகளின் எண்ணிக்கையில் குறைவுக்கான காரணம், அனுமதி பெற்றவர்களின் வியாபார வளாகங்களினை மதுவரி உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்கின்றமையினால், சட்ட கட்டமைப்பிற்குள் வியாபாரத்தினை நடாத்திச் செல்வதற்கு அவர்களினை வழிநடாத்துகின்றமையாகக் காணப்படுகின்றது. | அனுமதியளிக்கப்பட்ட இடங்கள் தொடர்ந்தும் கண்காணிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், தொழில்நுட்ப திடீர்சோதனைகளின் எண்ணிக்கையில் அளவுசார் அதிகரிப்பொன்று அவதானிக்கப்படவில்லை. | ஆகையினால் மதுவரி அனுமதிப்பத்திரங்களின் நிபந்தனைகளினை மீறியமைகளின் எண்ணிக்கையில் குறைவொன்று அவதானிக்கப்படுகின்றது. | |
| (ஈ) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகள் தொடர்பில் பெறுகைகள் மற்றும் செலுத்துகைகள் கணக்கின் மீதியில் படிப்படியான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. நிதியத்தினை ஸ்தாபிப்பதன் முக்கிய நோக்கமாகக் காணப்பட்ட திணைக்கள உத்தியோகத்தர்களின் வினைத்திறன் மற்றும் உற்பத்திதிறனை முன்னேற்றுவதற்கு அந்த நிதிகளின் பயன்பாடு திருப்திகரமானதாகக் காணப்படவில்லை. மேலும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள மிகை நிதிகள் தொடர்பில் திறைசேரியுடன் கலந்துரையாடுவதற்கு தேவையான நடவடிக்கைகளினை எடுப்பதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>**ஆண்டு** **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி**<br>---------- -----------------------------------------------------<br>ரூபா.<br>2018 415,384,906<br>2017 388,502,891<br>2016 362,998,739<br>2015 330,559,626<br>2014 258,943,440 | திணைக்கள உத்தியோகத்தர்களின் வினைத்திறன் மற்றும் உற்பத்தி திறனை முன்னேற்றும் பொருட்டு நிதிகளினை பயன்படுத்துவதற்காக திட்டங்களினை தயாரிப்பதற்கு தொடர்புடைய பிரிவுகள் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன. எதிர்காலத்தில்கூட இது மேற்கொள்ளப்படும் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | நிதியத்தின் நோக்கங்கள் மற்றும் திறைசேரியுடன் கலந்துரையாடல்களினை நடாத்துவதன் மூலம் மிகை நிதிகள் மீது முறையான நடவடிக்கை எடுப்பது தொடர்பில் அதிக கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். |
| (உ) | 1999 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க புகையிலை வரிச் சட்டத்தின் 17(அ), I மற்றும் II ஆம் பிரிவின் பிரகாரம் பெறப்பட்ட அபராதங்களின் 25 சதவீதத்திலிருந்து புகையிலை வெகுமதி நிதியமொன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும். ஆனால் அவ்வாறு செய்வதற்கு 2018 திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புகையிலை வெகுமதி நிதியமொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஏற்பாடுகளின் பிரகாரம் புகையிலை வெகுமதி நிதியமொன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | தொழில்நுட்ப பிரிவின் அறிக்கைகளின் பிரகாரம், 2018 ஆம் ஆண்டு மற்றும் பல்வேறுபட்ட முன்னைய ஆண்டுகளில் பெறப்பட்ட நடுவர்தீர்ப்பு கட்டணங்களிலிருந்து ஒவ்வொரு வகைகளின் கீழ் உரிமைகோரப்பட்ட வெகுமதிகளின் எண்ணிக்கை மற்றும் செலுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்ட தொகைகளுக்கிடையே அளவுசார் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன. | வெகுமதி நிதியத்திலிருந்து படிகளினை செலுத்துவதுடன் தொடர்புடைய 818 ஆம் இலக்க மதுவரி அறிவிப்பு தற்போதைக்குப் பொருத்தமானதாக திருத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. திருத்தத்தின் பின்னர் அவ்வாறான பிரச்சினைகள் தடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. | 818 ஆம் இலக்க மதுவரி அறிவிப்புடன் இணங்கியொழுகுதல் மற்றும் தொடர்புடைய முறையான முறைமையினை மீளாய்வு செய்தல் வேண்டும். |
| (எ) | மதுவரி, அறிவிப்பின் 6 ஆம் பந்தியின் பிரகாரம், வெகுமதிகளானவை மதுவரி திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் பறிமுதல்களில் நேரடியாக அல்லது மறைமுகமாக சம்பந்தப்பட்ட ஏனையவர்களுக்கு அறிவிக்கப்படும். எவ்வாறாயினும், பிரதேச அலுவலகங்களின் உத்தியோகத்தர்கள் சிலர் மற்றும் ஏனையோர்களுக்கு 255 சந்தர்ப்பங்களில் அவ்வாறான எவ்வித வெகுமதிகளும் அளிக்கப்பட்டிருக்காமை தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டன. | வெகுமதி நிதியத்திலிருந்து படிகளினை செலுத்துவதுடன் தொடர்புடைய 818 ஆம் இலக்க மதுவரி அறிவிப்பு தற்போதைக்குப் பொருத்தமானதாக திருத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. திருத்தத்தின் பின்னர் அவ்வாறான பிரச்சினைகள் தடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. | 818 ஆம் இலக்க மதுவரி அறிவிப்புடன் இணங்கியொழுகுதல் மற்றும் தொடர்புடைய முறையான முறைமையினை மீளாய்வு செய்தல் வேண்டும். |
| (ஏ) | தலைமை அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுக்கான வெகுமதிகள் நாடளாவிய ரீதியில் அனைத்து பிரதேச அலுவலகங்களினால் தொகுக்கப்பட்ட அனைத்து தொழில்நுட்ப குற்றங்கள் தொடர்பான அறிக்கைகளுடன் தொடர்புடைய நடுவர்தீர்ப்புக் கட்டணங்களின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படுகின்றன. எவ்வாறாயினும், பிரதேச அலுவலகங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனையோர்களுக்காக வெகுமதிகள் கணிப்பிடப்படும் பொழுது, அவர்களின் நேரடியான தலையீட்டுடன் தொடுக்கப்பட்ட தொழில்நுட்ப குற்ற அறிக்கைகளுடன் தொடர்புடைய நடுவர்தீர்ப்புக் கட்டணங்கள் மாத்திரம் கணக்கிற்கு எடுக்கப்பட்டன. நடாத்தப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்பின் பிரகாரம், 2018 சனவரி தொடக்கம் யூன் 30 வரையான காலப்பகுதியின் ஒவ்வொரு தரம் தொடர்பில் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பிரதேச அலுவலகங்களின் ஏனையவர்கள் மற்றும் தலைமை அலுவலகத்தினால் பெறப்பட்ட தனிப்பட்ட வெகுமதிகள் தொடர்பில் அளவுசார் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன. | வெகுமதி நிதியத்திலிருந்து படிகளினை செலுத்துவதுடன் தொடர்புடைய 818 ஆம் இலக்க மதுவரி அறிவிப்பு தற்போதைக்குப் பொருத்தமானதாக திருத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. திருத்தத்தின் பின்னர் அவ்வாறான பிரச்சினைகள் தடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. | 818 ஆம் இலக்க மதுவரி அறிவிப்புடன் இணங்கியொழுகுதல் மற்றும் தொடர்புடைய முறையான முறைமையினை மீளாய்வு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஐ) 818 ஆம் இலக்க மது அறிவிப்பின் 8(v) ஆம் பிரிவின் பிரகாரம், செலுத்துகைக்காக அங்கீகாரமளிக்கப்பட்டிருந்த ஒரு வருடத்திற்கு உட்பட்ட செலுத்தப்படாத அல்லது கோரப்படாத அனைத்து வெகுமதிகளும் நிதியத்தில் நிறுத்திவைக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 2013, 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய தொழில்நுட்ப குற்றங்கள் தொடர்பான 410 அறிக்கைகளின் அடிப்படையில், 2018 ஆம் ஆண்டில் ரூபா 2.5 மில்லியன் கூட்டுத்தொகையான வெகுமதிகள் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வெகுமதி நிதியத்திலிருந்து படிகளினை செலுத்துவதுடன் தொடர்புடைய 818 ஆம் இலக்க மதுவரி அறிவிப்பு தற்போதைக்குப் பொருத்தமானதாக திருத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. திருத்தத்தின் பின்னர் அவ்வாறான பிரச்சினைகள் தடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. | யதார்த்தமானதாக தயாரித்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 05 செலவின விடயங்கள் தொடர்பில் மதிப்பிடப்பட்ட ரூபா 3.6 மில்லியன் தொகை முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் வினைத்திறனான கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | விரைவில் பாதீட்டிலுள்ள வேறுபாடுகளினை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்துரைக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் பாதீடு முறையாகவும் யதார்த்தமானதாகவும் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அதன் பிரகாரம் செயல்படல் வேண்டும். |